DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

STC No.359/2022

Deposition of Witness for – Prosecution :PW1
Defence :

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | மேகல ரமணா | ஜாதி : | |
| த/பெ : | வெங்கப்பா | மதம் : | |
| கிராமம் : | அண்ணனூர் | தொழில் : | இரயில்வே |
| வட்டம் : | சென்னை | வயது : | 56/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி - 18.06.2025**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி : PW1**

1. எதிரி எந்த வருடத்தில் இருந்து எனக்கு வட்டி தரவில்லை என்று எனது புகார் மனுவில் கூறவில்லை என்றால் குறிப்பிடவில்லை. நான் வட்டிக்கு கடன் தரவில்லை. எதிரி வாங்கிய கடனை 2 அல்லது 3 மாதத்தில் திருப்பி தருவதாக கூறி இருந்தார். அதை நான் 3 மாதத்தில் திருப்பி கேட்டேனா என்றால் கேட்டேன். நான் கொடுத்த பணத்தை எதிரியிடம் திருப்பி கேட்டபோது எங்கள் இருவருக்குமிடையே பிரச்சனை ஏதும் ஏற்பட்டதா என்றால் இல்லை. எனது வங்கி கணக்கு எண் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் (பு.சா.ஆ.2 ) வங்கியில் இருந்து திருப்பப்பட்ட காசோலைக்கான ரிட்டன் மெமோவில் எனது வங்கி கணக்கு எண்.10306264395 என்றால் சரிதான். எதிரியின் வங்கி பேங்க் ஆப் பரோடாவின் அவரது சேமிப்பு கணக்கின் Statement of Accounts ன் காணப்படும் வங்கி கணக்கு எண் என்னுடையது தான்அதில் 22.06.2020 ஆம் தேதி எதிரி வங்கியில் இருந்து எனது கணக்கிற்கு ரூ.10,000/- அனுப்பியுள்ளார் என்றால் சரிதான்.

2. 17.07.2020 ஆம் தேதி அன்று ரூ.10,000/- மும், 04.08.2020 ஆம் தேதி அன்று ரூ.10,000/- மும், 14.08.2020 ஆம் தேதி அன்று ரூ.10,000/- மும், 12.09.2020 ஆம் தேதி அன்று ரூ.10,000/- மும் , 13.10.2020 ஆம் தேதி அன்று ரூ.10,000/- மும் ,15.10.2020 ஆம்

தேதி அன்று ரூ.10,000/- மும் , 28.11.2020 ஆம் தேதி அன்று ரூ.10,000/- மும், 07.12.2020 ஆம் தேதி அன்று ரூ.15,000/- மும், 23.12.2020 ஆம் தேதி அன்று ரூ.10,000/- மும் , 12.01.2021 ஆம் தேதி அன்று ரூ.10,000/- மும், 02.03.2021 ஆம் தேதி அன்று ரூ.10,000/- மும், 12.03.2021 ஆம் தேதி அன்று ரூ.10,000/- மும், 17.04.2021 ஆம் தேதி அன்று ரூ.10,000/- மும், 30.04.2021 ஆம் தேதி அன்று ரூ.10,000/- மும், 10.05.2021 ஆம் தேதி அன்று ரூ.10,000/- மும் , 08.06.2021 ஆம் தேதி அன்று ரூ.10,000/- மும், 30.06.2021 ஆம் தேதி அன்று ரூ.10,000/- மும், 17.08.2021 ஆம் தேதி அன்று ரூ.15,000/- மும், 16.09.2021 ஆம் தேதி அன்று ரூ.10,000/- மும், 01.10.2021 ஆம் தேதி அன்று ரூ.10,000/- மும், 18.10.2021 ஆம் தேதி அன்று ரூ.19,000/- மும், 05.01.2022 ஆம் தேதி அன்று ரூ.10,000/- மும், 14.02.2022 ஆம் தேதி அன்று ரூ.10,000/- மும், 01.03.2022 ஆம் தேதி அன்று ரூ.10,000/- மும், மற்றும் 19.03.2022 ஆம் தேதி அன்று ரூ.10,000/- மும் எதிரி அவரது வங்கி கணக்கில் இருந்து எனது வங்கி கணக்கிற்கு பணத்தை செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி எதிரியின் வங்கி கணக்கு ஆவணம் (**எ.ம.சா.ஆ.1**) ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் இரயில்வேயில் பணியாற்றி வரும் அடையாள அட்டை எண் தெரியுமா என்றால் 0254 ஆகும். எனது PAN அட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். நான் எதிரிக்கு கடன் கொடுத்தாக சொல்லப்படும் ஆண்டிற்குண்டான வருமானவ ரி செலுத்திய ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய சம்மதமா என்றால் இல்லை. நான் எதிரிக்கு வருமான வரியில் இருந்து தான் கடன் கொடுத்ததாக புகாரில் தெரிவித்திருந்தேன் எனது வருமான வரி கணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய கடமை உள்ளது. ஆனால் வருமான வரி ஆவணத்தை தாக்கல் செய்ய மறுத்துள்ளதால் இவ்வழக்கானது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

3. புகாரில் குறிப்பிட்ட தேதியன்று நான் எதிரிக்கு எந்த கடனும் தரவில்லை என்றும், 15.05.2020 ஆம் தேதி ரூ.2,00,000/- ம் எதிரிக்கு கடனாக கொடுத்ததாகவும், அந்த கடனை 2 மாதத்தில் ரூ.2,79,000/- ஆக 20 மாதங்களுக்கு வட்டியுடன் சேர்த்து திருப்பி செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில் 22.06.2020 முதல் 19.03.2021 வரை ரூ.2,79,000/- எதிரி திருப்பி செலுத்தியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. 20 மாதத்திற்கு பதிலாக 2 மாதம் கூடுதலாக ஆனதால் எங்களிடையே ஏற்பட்ட மனகசப்பு காரணமாக எதிரி மீது பொய் வழக்கு போடபட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு காசோலைகள் மற்றும் கடன் உறுதி சீட்டு ரூ.2,00,000/- ம் கடன் பெறும் போது கொடுத்தார் என்றால் சரியல்ல. கடன் உறுதி சீட்டு ரூ.2,00,000/-ம் கடன் கொடுக்கும்

போது கொடுத்தார். எதிரி அவரது வங்கி மூலமாக எனது வங்கி கணக்கிற்கு பணத்தை செலுத்திய விவரம் புகார் மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். 2019 ல் வாங்கிய கடனை எதிரி திருப்பி செலுத்தாதபோது மீண்டும் 2020 ஆம் ஆண்டு கடனை கேட்டு கொடுத்தேன் என்றால் சரியல்ல.

K. Mahasakthi
B.B.A.L.L.BHons

Digitally signed by K. Mahasakthi B.B.A.L.L.BHons
Date: 2025.06.18 13:23:34 +0530